4th August 1966]

Development of Kotagiri

* 95. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal to develop Kotagiri as a Tourist Centre ; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம். கோத்தகிரியை உல்லாசப் பிரயாணத்திற்கு ஏற்ற இடமாக அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(இ) இதற்கான வேலைத் திட்ட விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

ஆசிரியர்கள் மாற்றம்

* 96 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

ஒரு கோட்டத்திலுள்ள (Revenue Division) யூனியன்களில் வேலை பார்த்துவரும் ஆசிரியர்களை அவர்களது சொந்த யூனிய னுக்கு மாற்றம் தரும் அதிகாரம் அக்கோட்ட R.D.O. அவர்க ளுக்குக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையி லுள்ளதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை, ஐயா.

• **திரு. இரா. நாராயணன் :** ஒரு கோட்டத்தில் பத்து பஞ்சாயத்து யூனியன்கள் உள்ளன. அந்தப் பத்து பஞ்சாயத்து யூனியன்களி லுள்ள ஆசிரியர்களை அந்தக் கோட்ட ரெவன்யூ டிவிஷனல் ஆபீஸரே மாற்றுவதற்கு ஏற்பாடு செய்தால் சௌகரியமாக இருக்கும். ஜில்லாவாரியாக ஏற்படுத்துவதற்கு காலதாமதம் ஆகிறது. இனிமேலாவது அதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்யுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இப்போது அந்த அதிகாரம் ஜில்லா கலெக்டரிடம் இருக்கிறது. திருப்தியான அளவில் அது நடந்து வருவதால் எந்த விதமான மாற்றமும் செய்ய உத்தேசிக்க வில்லை.

ஆசிரியர்களுக்கு வீடுகள்

* 97 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பஞ்சாயத்து பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசாங்கத்திடம் உண்டா ?

(இ) ஆமெனில் எப்பொழுதிலிருந்து அமல்படுத்தப்படும் ?